இப்போது அது பண்ணி, உடனே தயாராகும்.	It is now being made, and will soon be ready.
அது சீக்கிரமாய் வேண்டியிருக்கும்; ஆகையால் பார் அது தடைபடமாட்டாது.	It will be required soon; see that no delay occurs.
இப்போ இந்த மேகங்கள் எல்லாம் இராமுழுதும் எவ்வளவு மின்னலாயிருந்தது, நீ பார்க்கவில்லையா?	Didn't you see how all these clouds were, and how it was lightning all last night?
சந்தேகமில்லாமல் சாயந்திரத்துக்கு முன்னே மழை இருக்கும், நீ சுண்ணும்பை மூடிவைக்காவிட்டால் எல்லாம் கெட்டுப் போகும்.	There will be rain before evening without doubt, and if the lime is not covered it will all be spoiled.
ஐயா, இன்று மத்தியானத்துக்குள்ளே கொல்லறு ஆயத்தமாயிருக்கும்.	The trowel will be ready by noon, Sir.
நல்லது, பின்பு ஆளுகள் ஒரே தடைவையாய் பாய்கள் போட்டு சுற்றிலும் நட்டிருந்தால், அதனாலே மழைத்தண்ணீர் உள்ளே வராது.	Very well, then have men ready to put it up at once, and fix matting all round so that no rain may get in.
உன் வேலை முடிந்த உடனே சாயங்காலத்துக்குள்ளே என்னிடத்துக்கு வா. உன்னோடு கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது.	Come to me in the evening when your work is done. I have something to say to you.
ஐயா, சாயந்திரம் வரச் சொன்ன அந்த மேஸ்திரி, இங்கேயிருக்கிறான்.	Sir, that Maistry, whom you told to come in the evening, is here.
நல்லது, அவன் உள்ளேவரட்டும்.	Well, let him come in.
இங்கே வா மேஸ்திரி; கூரையிலே வெடிப்பு பார்க்கிறாயா?	Come here, Maistry; do you see that crack in the roof?
ஆம், ஐயா; கொஞ்சம் தெரிந்தும் தெரியாமையுமாயிருக்கிறது.	Yes, Sir; it is hardly perceptible.
கொஞ்சம். நான் அப்படி நினைக்கத்தக்கது; அந்த வெடிப்பு என் தோள் அவ்வளவு இருக்கிறது.	A little. I should think so; the crack is as long as my arm.
இப்போ பார், மழை வந்தால், அந்தக் கூரை அந்தப் பக்கத்திலே விழுந்துபோம்.	Now see, if rain comes, the roof will fall in at that part.
அது மராமத்து பண்ணியிருக்கவேண்டும்.	That must be repaired.
செங்கல்லுகளில் நாலு உடைந்திருக்கிறது, நீ பார் ஒருவேளை அஞ்சாயிருக்கும்.	Four of the bricks, you see, are boken, perhaps five.

முதலாவது மேலிருக்கிற மண்ணை எடுத்துப் போட்டு அறைக்குள்ளே செங்கல் ஜல்லி விழாமலிருக்கப் பத்திரமாய் இரு.
You will first take off the earth from above, and take care that none of the broken bricks fall into the room.

பின்பு அது ஒன்றுமில்லாமல் மெத்தநல்லச் செங்கல்லுகள் போட்டிருக்கப் பார்.
And then see that none but the best bricks are laid on.

ஐயா, மெத்த சாக்கிரதையாய் வேலைசெய்வேன்.
Sir, I will do the work with great care.

நல்லது, காலமே உன்னோடு இரண்டு ஆளுகளைக் கொண்டா.
Well, come in the morning and bring two men with you.

இந்தச் சாந்து பூச வேறொரு சின்ன கொல்லறு உனக்கு வேண்டியிருக்கும்.
You will need another little trowel to put over this mortar.

ஐயா, போன வருஷத்து பழைய சின்ன கொல்லறு ஒன்று மாட்டுக்கொட்டாயின் அடியில் இருக்கிறதாய் நினைப்பு இருக்கிறது. அது இந்த வேலைக்கு மெத்த நல்லது.
Sir, I recollect there is an old small trowel of last year lying in the bullock-shed. It will be very good for this work.

ஐயா, அந்தக் கொல்லற்றை மிகவும் தேடினேன், ஆனால் அது அகப்படுகிற சாடையில்லை.
Sir, I have made great search for that trowel, but no trace of it has been found.

அந்த இடத்திலிருக்கிற சனங்களை விசாரணை பண்ணினையா?
Did you make enquiries of the people at that place?

ஐயா, அங்கே ஒருவருமில்லை, அது ரஜா நாளாய் இருந்தது.
Sir, there was nobody there, as there was leave at that time.

எழுமூரிலிருந்து திரும்பி வரும்போது ஏழுமணிக்கு மறுபடியும்போ, வண்டிக்காரர்கள் மாட்டுக் கொட்டாயிலிருப்பார்கள்.
Go again at seven o'clock, when the carts will have come back from Egmore and the carters will be at the bullock-shed.

கெடியாரத்தில் நாலுமணி ஆச்சுது. மணி அடிக்கச் சொல்லு.
Tell them to ring the bell, it is four by the clock.

அது உனக்கு அகப்பட்டதா?
Have you found it?

ஆம், ஐயா; அதைக் குறித்து கொஞ்சம் கேள்விப்பட்டேன்.
Yes, Sir; I have heard something of it.

கொற்றர்கள் அதை எடுத்து ஒளித்துப் போட்டார்கள்.
The masons took away the trowel and hid it.

அவர்கள் எந்தக் கொற்றர்கள்?
What masons were they?

உத்திரவில்லாமல் அப்படிப்பட்ட காரியம் அவன் ஆளுகள் யாதொன்றையும் செய்யவேண்டாம் என்று நீ மேஸ்திரிக்குச் சொல்லவேண்டும்.
You must tell the Maistry not to let his men do anything of that kind without permission.

அந்த மூங்கில் பாயைக் கொண்டுவந்தையா?
Have you brought the bamboo mat?

ஐயா, அந்தப் பாய் இப்போது இல்லை.
Sir, that mat is not now to be seen.

அது எப்படி போச்சுது?	What has become of it?
ஒரு நாள் கொஞ்சம் நெருப்பு ஒரு ஆளினுடைய அடுப்பிலிருந்தது, அதனாலே அந்த பாய் எரிந்து போச்சுது.	One day some fire remained in one of the men's fire-place and so the mat was burned.
குப்பனை காலமே என்னிடத்துக்கு வரச் சொல்லு.	Tell Kuppan to come to me in the morning.
பாய்க்கார மேஸ்திரியை என்னிடத்திற்கு அனுப்பு. புதுப் பாய்க்கு உத்திரவு கொடுப்பேன்.	Send the head thatcher to me. I will give orders for a new mat.
புது வெட்டுக்கால் கட்டடத்தைப் பார்க்கிற மேஸ்திரியின் பேர் என்ன?	What is the name of the Maistry who is to look after the building of the new canal?
ஐயா, இந்த வேலைக்கு ராமனை நேமித்தீர்.	You appointed Raman to that work, Sir.
அவன் இப்போ எங்கே?	Where is he at present?
சனிக்கிழமை ரஜாவாங்கிக்கொண்டு போனான் நாளைக்கு திரும்பிவருவான்.	He went on leave on Saturday and is to return to-morrow.
நல்லது, அவனை என்னிடத்திற்கு பன்னிரண்டு மணிக்கு அனுப்பு.	Very well, send him to me at 12 o'clock.
ஐயா, அவன் இங்கே இருக்கிறான்.	He is here, Sir.
கேளு. தளவரிசை முடிந்த உடனே, பழையபார்குச்சு மராமத்து பண்ணி வெள்ளை அடித்திருக்க வேண்டியது.	Listen. As soon as that flooring is completed, the old barracks are to be repaired and white-washed.
முதலாவது அறைகளின் ஒன்றிரண்டு தயாராய் இருக்க அவசியமாய் இருக்கும்.	It will be necessary to get one or two of the rooms ready first.
ஐயா, என்ன ஆயத்தம் அவசியமாயிருக்கிறது?	What preparation is necessary, Sir?
அறைகளில் இருந்து ஏதாவது சாமான்கள் எடுக்க வேண்டுமா?	Is there anything to be taken out of the rooms?
இல்லை, இல்லை. அறைகள் வெறுமையாயிருக்கின்றன. வேலைக்காக வழக்கமான ஆயத்தம் என்பது தான்.	No, none. The rooms are empty. I mean the ordinary preparations for the work.
பூராறு துணி எடுத்துப் போட்டு மராமத்து பண்ணி வெள்ளையடித்திருக்கிறது.	The ceiling cloths to be taken down and mended and washed.
சாவகாசம் பண்ணாமல் சுண்ணம்பு பார்குச்சுக்கு அனுப்பி; புருசும், சாரமும் ஆயத்தஞ்செய்து இருக்கிறது.	The lime to be sent to barracks; the brushes and scaffolding to be prepared, so that there may be no time lost.

Tamil	English
ஐயா, எனக்கு தெரியும்; நான் இன்றைக்கு கூலிகளை அனுப்புவேன், நீர் உத்திரவு பண்ணுகிறபோது பூராறு துணி அவிழ்த்து விடுவார்கள்.	I understand, Sir; I will send up the coolies to-day, and at whatever time you order the ceiling cloths shall be unfastened.
பூராறு துணிகளின் ஓரத்திலிருக்கிற கயிறுகள் செல்லேறி அந்தத் துணி அனேக இடங்களில் கெட்டுப் போச்சுது. அதுகள் எல்லாம்புகையினாலேஏறக்குறைய கறுத்துப் போச்சுது. இதுகள் எல்லாம் மராமத்துபண்ணி வெள்ளைப் பூசுவதற்குமுன்னே மறுபடியும் போட வேண்டியது.	The strings on the edge of the ceiling cloths have been much eaten by white ants, and the cloth itself destroyed in many places. And they are all more or less blackened with smoke. These must all be repaired and re-fixed before the white-washing.
இப்போ நாலறைகள் வெறுமையாயிருக்கின்றன, மற்றவைகள் வருகிற வாரம் காலியாயிருக்கும்.	Four of the rooms are empty now, the rest will be empty next week.
நீ திங்கள் கிழமை வேலை ஆரம்பிக்க தயாரா யிருப்பாயா?	Will you be ready to commence the work on Monday?
முதல் பார்குச்சின் பூராறு துணி எல்லாம் எடுத்துப் போட்டவுடனே எனக்கு தெரியட்டும், அதுகளுக்கு வெள்ளை அடிக்கவும் மராமத்து பண்ணவும் காலம் வீணாய் போகாமலிருக்கும்.	Let me know as soon as all the ceiling cloths of the first barracks have been taken down, so that no time may be lost in getting them washed and mended.
முதல் அறையின் பங்கா என்ன செய்தாய்?	What have you done with the punkah of the first room?
ஐயா, அது அறையில் இருக்கிறது.	There it lies, Sir, in the room.
ஆனால், அங்கேயிருந்து கொண்டுவந்து கிடங்கிலே போடு, முதலாவது துணியை எடுத்துப் போட்டு மடித்து விடு.	Then bring it away from there and put it in the godown, first taking off the cloth and folding it up.
கயிறும் சேர்த்து, எல்லாம் ஒன்றாய் போடு.	Collect and tie up the rope also and put all together.
நீ இப்போ என்ன வேலையில் இருக்கிறாய்?	What work are you engaged upon just now?
இப்போது தானா? புது வொர்க் ஷாப்பின் தளவரிசையில் இருக்கிறாய்.	Just now? On the floor of the new workshop.
என்ன? அது இன்னம் ஆகவில்லையா? மூந்தாநாள் ஆச்சுது என்று நினைத்தேன்.	What? That not done yet? I thought it was finished the day before yesterday.

நீ பார்த்த அந்தப் பெரிய அறை முடிந்து இருக்கிறது இரண்டு பக்கத்திலுமிருக்கிற இரண்டு சின்ன அறைகள் இன்னம் ஆக இல்லை, ஆனால் அதுகளும் சீக்கிரத்தில் தயாராகும்.	The large room which you saw is finished. The two little rooms on either side of it are not yet done, but they too will soon be ready.
ஆனால், நான் உத்திரவு கொடுத்த வேறே வேலைக்கு நீ போகிறதற்கு முன்னே அதுகளை முடிக்கவேண்டும்.	Then you must finish them before going to the other work I have ordered.
வீரராகவ மேஸ்திரி, வந்தானா?	Has Veraragava Maistry come?
ஆம்; ஐயா, அதோ நிற்கிறான்.	Yes, Sir, there he stands.
எங்கே? நான் அவனைப் பார்க்கவில்லை.	Where? I do not see him.
அதோ அவன் தன் கைகளில் இரண்டடிகோல் வைத்துக் கொண்டிருக்கிறான்.	There he is with the two-feet rod in his hand.
ஆம், ஆம். அவனைக் கூப்பிடு.	Yes, Yes. Call him.
நாளைக்குக் காலமே பாலத்துக்கு எத்தனை பேர் வேலைக்கு வருவார்கள்.	How many men will come to the bridge-work to-morrow morning?
நாளைக்கு ஒன்பதுபேர் வருவார்கள்.	Nine men will come to-morrow.
ஒன்பது ஆளுக்கு அதிகமாய்க் கொண்டுவரக் கூடாதா?	Can't you bring more than nine?
மற்ற உன் ஆளுகள் எந்த வேலையிலிருக்கிறார்கள்?	On what work will the rest of your men be engaged?
வேறே வேலையில்லை. இன்னம் அனேகம் பேர்கள் நாளை நன்றைக்குவருவார்கள், ஆனால் நாளைக்கு தமிழருக்கு விடுமுறை நாளாயிருக்கிறது.	Upon no other work. Several more men will come the day after to-morrow, but to-morrow is a holiday for all the Tamilians.
பின்வரும் நாளிலே இருபத்தஞ்சு ஆளுகள் வேலையில் இருப்பார்கள், பாலம் முடிந்த உடனே வேறே ஆளுகள் வருவார்கள்.	The following day twenty-five men will be at work, and as soon as the bridge is finished another party will come.
நாம் இன்னம் அனேக ஆளுகள் வைக்கக்கூடும், ஆகையால் உனக்குக் கிடைக்கிற ஆளுகளை கொண்டுவரலாம். அனேக செங்கல்லுகள் சேர்க்கப்பட்டு அஸ்திவாரத்துக்காகப் பள்ளம் வெட்டி இருக்கிறது.	We can put on a large number of men now, so you may bring as many as you can get. A large quantity of bricks has been collected, and the excavation has been made for the foundation.
மழையினாலே உன் வேலைக்கு என்ன நஷ்டம் ஆச்சுது வந்து சொல்லு.	Come and tell me what damage the rain has done to your work.

Tamil	English
ஐயா, பாலத்தின் கிட்ட கெட்டுப்போய் மண்ணும் தண்ணீரும் கலந்த சுண்ணாம்பு எல்லாம் எடுக்கப்பட்டது.	Sir, all that lime has been collected at the bridge which has been spoiled, and mixed with earth and water.
எப்படி? அதுகளின் மேலே பாய் போட்டிருக்கவில்லையா?	How? Was there no mat over it?
மெய்யாகவே பாய் போட்டிருந்தது, ஆனால் அது காற்றடித்துக் கொண்டுபோய் கொஞ்சம் தூரத்திலே போட்டு விட்டது. காற்று மெத்த பலமாயிருந்தது.	There was a mat certainly, but it was blown and even carried away to some distance. The wind was very high.
அனேக செங்கல்லுகளும் ஆற்றில் முழுகி நஷ்டமாச்சுது.	There has been a great loss of bricks too—sunk in the river.
தண்ணீர் வடிந்தபின்பு இதுகள் திரும்பி நமக்கு கிடைக்கக் கூடும்.	We can get these again when the water diminishes.
ஆனால் மணல் இரண்டு மூன்றடிகள் அதின்மேலே மூடப்பட்டிருக்கிறது. அதுகளை நாம் வெட்டி எடுக்கவேண்டும்.	But two or three feet of sand will have been deposited over them. We shall have to dig them out.
பத்து பன்னிரண்டு பலகைகளும் காணாமல் போச்சுது.	Ten or twelve planks too have been lost.
அதுகள் எங்கே போச்சுது?	Where have they gone?
அதுதெரியவில்லை. ஆற்றங் கரையில் நாங்கள் போட்டிருந்தோம், இராக் காலத்தில் ஆறுமெத்த பலமாய் வந்த போது, பலகைகள் மிதந்து போச்சுது.	There is no knowing. We had left them on the river bank, and when the river came down in force during the night the planks floated off with it.
கிடங்கின் முன் பக்கத்திலிருக்கிற அந்தப் பள்ளம் தண்ணீரால் நிரப்பப்பட்டிருந்தது. அந்த வேலை நிறுத்தப் பட்டிருக்கிறது.	That hole in front of the godown has been filled with water. That work has been put a stop to.
ஆனால், நீ மற்றவேலைகளுக்கு ஆளுகளைப் போடக்கூடும்.	But you can put the men on other work.
ஆம், ஆம், அங்கே வேறே மெத்த வேலை இருக்கிறது.	Oh, yes; there is plenty of the work.
இன்று மத்தியானம் பாலத்தண்டை உன் வேலைபார்க்க வருவேன். இப்போ ஒர்க்ஷாப்புக்குப் போகிறேன். என்னோடு கூடவா, நேற்று சாயந்திரம் சொன்ன இரும்பு தாப்பாளுகளுக்கு உத்திரவு கொடுப்பேன்.	I will look at your work at the bridge this afternoon. I am going to the workshop just now. Come along with me, and I will give the order about the iron bolts which you spoke to me about yesterday evening.

பெரிய கொல்லனாகிய கோபாலன் இங்கே யிருக்கிறானா ?
Is Gôpâl, the head Smith, here?

ஆம், ஐயா ; இங்கே இருக்கிறான்.
Yes, Sir; here he is.

பார் பாலத்தின் சாரத்துக்காகத் தாப்பாள்களில் இன்னம் முப்பது வேண்டி இருக்கிறது. அது தயார் பண்ணுகிற வரையில் போடக் கூடாது.
See, there are thirty more of those bolts required for the scaffolding at the bridge. It cannot be put up till they are ready.

இத்தனை வேண்டி யிருந்த தென்று உனக்கு குமஸ்தா சொன்னதில்லையா ?
Did not the clerk tell you how many were required ?

வேண்டி யிருக்கிறது இத்தனையென்று நம்பி நானே செய்து கொண்டு வந்தேன், கொஞ்சம் பிசகிப் போச்சுது. உடனே அதிகமாய் இருபது தயாராயிருக்கிறது கொண்டு வருவேன்.
I took the number myself, and had as many made as I believed to be required. There has been some mistake. I will have twenty more got ready immediately.

ஆம், உன்னாலே கூடியமாத்திரம் சீக்கிரமாய் செய்.
Yes, do as quick as possible.

மேஸ்திரி, அவன் பேர் என்ன ?
Maistry, what is his name ?

அந்த மேஸ்திரியைக் கூப்பிடு. அவன் செவிடன் என்று நினைக்கிறேன்.
Call that Maistry. He is deaf, I think.

நான் கூப்பிட்டது உனக்கு கேட்கவில்லையா ?
Did you not hear me call?

இல்லை, ஐயா ; கொல்லன் கடையின் கதவண்டை மெத்த சத்தமிருந்தது, ஒருவரும் கூப்பிட்டது கேட்கவில்லை.
No, Sir; there was much noise at that door from the Smith's workshop that I heard no one call.

நல்லது, தாப்பாளுகளைக் குறித்து உத்திரவு கொடுத்தேன். அதுகள் இப்போதே தயாராய் இருக்கும். இப்போ உன் வேலைக்குப்போ. மத்தியானத்துக்குமேல் வாராவதி அண்டை வருவேன்.
Well, I have ordered those bolts. They will be got ready immediately. Go now to your work. I will come to the bridge in the afternoon.

ஐயா, இப்போ கூலிகளின் குடிசைகளைப் பார்க்கிறீரா ?
Can you look at the coolies' huts now, Sir?

முதலாவது கொஞ்சம் வேறே வேலை பார்க்கவேண்டி இருக்கிறது.
I have some other work to look at first.

அங்கே ஒரு மணி நேரத்துக்குள்ளே வருவேன்.
I will come there in about an hour's time.

அந்தத் தளவரிசை எப்போது முடியுமென்று நினைக்கிறாய் ?
When do you expect to have that flooring finished ?

எது ஐயா; பார்குச்சின் தளவரிசையா அல்லது, கேப்டனுடைய ஆபீசின் தளவரிசையா?	Which, Sir; the flooring of the barracks or of the Captain's office?
சுமார் நாலுநாள் வேலை இன்னம் இருக்கிறது.	About four days' work still remains.
அடுப்பு ஆச்சுதா?	Have you finished the fire-place?
இன்னம் இல்லை. இப்போ அந்த வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.	Not yet. They are working at that now.
ஆனால் தளவரிசை போடுகிறதற்கு முன்னே அது நீ முடித்திருக்க வேண்டும்.	But you should have finished that before laying down the flooring.
அந்த இடத்தில் தளவரிசை போடுகிறதற்கு முன்னே அது முடிந்திருக்கும். கடைசி அறை விட்டிருக்கிறது செங்கல்லுகள் கொட்டி எலலா ஆயத்தங்களும் வேலைக்கு ஆசாராயிருந்தது. கொற்றர்கள் நாளைக்குக் காலமே துவக்குவார்கள். அந்த அடுப்பு இன்றைய மத்தியானத்தில் தயாராகும்.	It will be finished before laying down the flooring at that place. I left that room to the last; the bricks have been laid down, and every preparation made for the work. The masons will begin it to-morrow morning. The fire-place will be ready this afternoon.
நல்லது. தாழ்வாரத் தூண்களுக்குச் சாந்து பூசுதலைக் குறித்துக் கொஞ்சம் உத்திரவு உனக்குக் கொடுக்கவேண்டும். இன்று சாயந்திரம் அஞ்சுமணிக்கு வருவேன்; அப்போது ஆசராயிரு.	Very well. I wish to give you some directions about the plastering of the verandah pillars. I will come at five o'clock this evening, be present at that time.
பார், உனக்கு காட்டவேண்டியது இதுதான். இந்தத் தூண்களின் சிகரத்தில் நீ சரியாய் வேலை செய்யவில்லை. இது, நீ பார், மற்றொரு பக்கத்தை விட மெத்த அகலமாய் இருக்கிறது.	See, this is what I wanted to show you. You have not made these pillars quite correct at the top. This, you see, is broader on one side than on the other.
ஐயா, சமானமாய் இருக்கிறது, சரியாய் மாதிரிபிரகாரம்.	They are alike, Sir; exactly according to the pattern.
என்ன? கண்ணில்லையா?	What? Have you no eye?
உன் கவிராயத்தைக் கொடு.	Hand me your compasses.
இப்போ இது என்ன இங்கேபார்.	Now, look here. What's this?
அதுக்குச் சந்தேகமில்லை, ஐயா மெத்த வித்தியாசம்.	No doubt of it, Sir; there is a great difference.
இந்தப் பக்கத்திலே மற்றொன்றோடு ஒப்பிடுவதில் மெத்த அகலமாய் இருக்கிறது.	On this side it is very broad in comparison with the other.
ஆம், மாதிரியின்படி எல்லாம் சரியாயிருக்கிறதாய் சொன்னாய்.	Yes, and you told me it is all right, just according to the pattern.

மெய்தான் ஐயா, என்னிடத்தில் தப்பிதமிருக்கிறது.
Quite true, Sir; I have been in fault.

எனக்கு ஒன்று கொடு, அதின் பேர் என்ன? இப்போது உன் கையிலிருக்கிற அந்தச் சிறிய நல்ல ஆயுதம்.
Give me a thing, what is its name? That small fine tool that was in your hands just now.

இல்லை, இல்லை; மிகவும் சிறிய கொல்லறு போலிருக்கிறது.
No, no; that one like a very little trowel.

ஆம் ஆம், இதோ இருக்கிறது.
Oh, yes. Here it is.

ஆம், ராமா; அது கொடு.
Yes, Rama; hand it to me.

அவ்வளவு எடுத்துப் போடு; நீ பார்க்கிறையா? பின்பு இதுவும் அதுவும் சேரு.
Take off so much, do you see? Then join this and that.

மெத்த சுறண்டாதே. மெதுவாய், இப்போ நான் பார்க்கட்டும்.
Don't scrape too much. Gently, now let me see it.

அது போதும், அப்படியே வேறொரு பக்கத்திலே பண்ணக்கூடுமானால் அது சரியாய் போதும்,
That will do, that will do exactly if you can make the other side exactly the same.

ஐயா, அதை மெத்த சாக்கிரதையாய் செய்வேன்.
Sir, I will do it with great care.

நல்லது, செய்.
Well, do.

சாந்தின் நிறம் மெத்த நல்லது.
The color of the plastering is very good.

ஆம், அது சரியாயிருக்கிறது. அந்தத் தூண்களுக்கு எத்தனை பூசல் வர்ணம் இருக்கிறது?
Yes, that is right. How many coats of color are there on those pillars?

ஒரு பூசல் வர்ணம், அடியில் இரண்டு பூசல் சாந்து.
One coat of color, and two coats of plaster below.

நல்லது, அது நன்றாய்க் காணப்படுகிறது. அப்படியே இந்தத் தூண்களுக்குப் பண்ணு.
Well, it looks very well. Make these pillars exactly the same.

பத்திரம், நீபோகிற இடம் உனக்குத் தெரியவில்லையா? சாரம் முழுதும் நாலு ஆளுகளும் நீ கொண்டுவா.
Take care. Do you not see where you are going? You will bring down the whole scaffolding and four men with it.

மேஸ்திரி, இங்கேபார்; இந்தசாரத்தை பலமாய் கட்டவேண்டும். இந்த இடத்திலே ஒரு கப்பி போதாது, பார்; இந்தச் கயிறுகள் பின்னும் தளர்த்தியா இருக்கிறது.
Look here, maistry; you must have this scaffolding strengthened. One pulley is not enough at this place, and see these ropes are quite loose besides.

அப்படி வைத்துவைக்காதே, இந்த ஆள்கள் தலைமேல் கூடை எடுத்துக் கொண்டு போனபோது முழுதும் அசைந்து விழுகிறதுபோல் இருந்தது.
You must not let it remain so; when this man ran against it with his basket on his head, the whole shook and seemed on the point of falling.

உடனே செய்து போடு. இந்த ஆளுகளை கிழேவரக் கட்டளையிடு.
Get that done directly. Bid these men come down.

நீ கிழேவா, நீங்கள் எல்லாரும் பத்திரமாய் இருங்கள்.
Descend you, all of you, carefully.

செய்யவேண்டியதை அவர்களுக்குக் காட்டினையா? ஆனால், என்னோடு கூட இங்கே வா.
Have you shown them what to do? Come here, then, with me.

நில்லு. இந்த ஆப்புகளை எடுத்துப்போட்டு தரையிலே இன்னம் கொஞ்சம் ஆழத்தில் நடு.
Stop. Take out these pegs and fix them a little deeper in the ground.

அது போதும், அந்தக் கயிற்றை மெத்த கெட்டியாய் இழு.
That will do, and pull the ropes quite tight.

இப்போ அதுகளை விட்டு விட்டு என்னோடு கூடவா.
Leave them now and come along.

இந்தச் சுவரின் சாந்து இன்னம் கொஞ்சம் வழுவழுப்பாய் செய்திருக்கவேண்டியதில்லையா? இந்த ஆளுகள் வேலையின் முதலில் செய்ததுபோல இல்லை.
Could not the plastering of this wall be made a little smoother? This is not like the first piece of work these men did.

இல்லை, அவர்கள் சாந்து நன்றாய் பூசவில்லை சாந்து இந்தவேலைக்கு மெத்த மட்டமாய் இருக்கிறது.
No, they have not applied the plaster properly, and the plaster is rather coarse, too, for this work.

ஆம், இது அவர்களுக்கு காட்டவேண்டும். அதுஎல்லாம் ஒரே மாதிரியாயிருக்கவேண்டும். அவர்கள் கொஞ்சம் பிரயாசைப் படவேண்டும். இது மெத்த அவசரமாய் செய்திருக்குது.
Yes, you must show them this. It must all be made uniform, and they must apply a little more labour. This has been done too hurriedly.

அடா மேஸ்திரி, ரஜாபெற்றுக் கொண்டுபோன உன் ஆளுகள் ஆடிமாசம் திரும்பி வருவார்கள் என்று சொன்னதில்லையா?
I say, maistry, did not you tell me that all your men who had gone on leave were to be back in the month of July?

ஆம், அப்படி அவர்கள் எனக்குச் சொன்னார்கள்.
Yes, so they told me.

இன்னம் ஒருவனும் வந்ததில்லை, ஆடிமாசம் ஒன்பது பத்து தேதியாய் இருக்கிறது அல்லவா?
And still not one of them came, and this is the 9th or 10th of July, is it not?

ஆம், ஐயா; பத்தாந்தேதி.
Yes, Sir; the 10th.

அவர்களைக் குறித்து ஏதாவது கேள்விப் பட்டையா?
Have you heard anything of them?

நல்லது, உனக்குத் தெரியும், மூன்று பங்களா ஆரம்பிக்கிறதற்கு முன்னே இன்னம் ஆளுகள் நமக்கு வேண்டும்; மழை சுத்தமாய் நின்றபின்பு அதுகளை ஆரம்பிக்கவேண்டும்.
Well, you know we must have more men before beginning the three bungalows, and I wish to commence them as soon as the rains appear to be fairly over.

அந்தக் காலத்திலே உன்னுள்கள் வருவார்களென்றுநம்பினேன், ஒரு பட்சத்துக்கு முன்னே வேலைக்குத் தேடிக்கொண்டு இருபத்தஞ்சு முப்பது கொற்றர்கள் வந்தபோது இதனாலே அவர்களை வைத்துக் கொள்ள இல்லை.	I depended upon your men coming back in time, and a fortnight ago, when twenty-five or thirty masons came to me seeking employment, I did not keep them on this account.
உன் ஆளுகள் இந்த வாரத்திலே திரும்பி வராவிட்டால் அவர்களுக்குப் பதிலாக மற்றவர்களை வைப்பது அவசியமாய் இருக்கும்.	If your men don't return this week, it will be necessary to get others in place of them.
அந்தத் தூணை என்ன செய்தாய் இப்போ நான் பார்க்கட்டும். அது எல்லாம் இப்போ சரிதானா?	Now, let me see what you have made of that pillar. Is it all right now ?
இப்போ மிகவும் சரியாயிருக்கிறதாய் நினைக்கிறேன்.	In my opinion it is quite exact now.
தயவு செய்து அதை வந்து பாரும்.	Please come and look at it.
இப்படி; அந்த ரஸ்தா மூடி இருக்கிறது.	This way, that road is closed.
எப்படி ? அந்த ரஸ்தா எப்படி மூடி இருக்கிறது ?	How? How is that road closed ?
புதுதளவரிசை அந்த அறையில் இன்னம் காயவில்லை, ஆகையால் வாசற்படி அண்டை சனங்கள் போகாமல் தடுக்கப் பாயும் மூங்கிலும் குறுக்கே போட்டுக் கட்டி யிருக்கிறேன்	The new floor is not dry yet in that room, so I put mat and bamboos across the doorway to prevent people from going in.
ஆம், அது எல்லாம் சரி. நான் மறந்து போனேன்.	O yes, that's all right. I had forgotten.
இந்தச் சாரம் எல்லாம் பத்திரமாய் இருக்கிறதா ?	This scaffolding is all secure now, is it ?
அதுமெத்தபத்திரமாயிருக்கிறது.	It is quite secure now.
நான் இப்போ தூணைப் பார்க்கட்டும். ஆம், நல்லது, இதுபோதும்.	Now let me see the pillar. Yes, well, this will do.
முதல் முடிந்த அந்தத் தலைத் தூணுக்குச் சம்பந்தமான தாழ்வாரத்தின் மற்றொரு கடைசிக்கு இந்தக் கோட்டிலிருந்து இப்போ கோடு கிழி.	Now stretch a line from this corner to the other end of the verandah, to the corresponding corner at the head of that pillar that was done first.
பின்பு கயிறு சரியாய் வர நடுவான எல்லாத் தூண்களின் போதிகை பண்ணு. அப்படிச் செய்தால் திரும்பி தப்பிதமில்லை.	Then make the capitals of all the intermediate pillars exactly meet the string. In that way there will be no error of this kind again.

ஒவ்வொன்றுக்கு அகலம் பத்திரமாய் அளக்கவேண்டும். ஒவ்வொரு பக்கத்தின் நடுப் பாதியிலிருந்து எப்போதும் அள.	The breadth you must measure carefully for each, and always measure from the middle half on each side.
இந்தச் சித்திரவேலைக்கு நீ கொடுத்த மாதிரிக்கு மெத்த சரியாய் செங்கல் அறுக்கவேண்டும்.	For this cornice you ought to have cut the bricks more exactly of the form given you.
மெத்த சாந்து இங்கேவேண்டியிருக்கும்.	A great deal of plaster will be required here.
கூடியமாத்திரம் சாந்து கொஞ்சமாயிருக்கும்படி சரியான வொழுங்குக்கு மெத்த நெருக்கமாய் செங்கல் போடவேண்டும்.	Cut the bricks very closely to the proper form, so as to have the plaster as thin as possible.
உடைந்தால், பின்பு கொஞ்சம் அபாயமாயிருக்கும்.	There will then be less danger of its being broken.
பார் அந்த நாலாவது தூண் மெத்த செங்குத்தாய் காணப்படஇல்லை.	See that fourth pillar does not appear to me to be quite perpendicular.
உன் ஈயக்கோல் கொண்டா.	Bring your plummet.
அதை நடுவிலேபிடித்துக்கொள்.	Hold it over the centre.
அந்தக் கொற்றன் கையில் கொடுத்துவிட்டு இங்கேவா.	Give it into that mason's hand and come here.
எனக்குத் தோன்றியபடி அவ்வளவு இல்லை, ஆனால் அது சரியாய் இல்லை யென்று நீ பார்.	It is not so much out as I had imagined, but you see it is not quite correct.
நான் பார்க்கிறேன்; ஐயா, அது கொஞ்சம் வலதுபக்கத்தில் சாய்கிறது. அதை நான் சரியாய் செய்வேன்.	I see, Sir; it leans a little to the right hand. I will make it right.
சரியாய். அது வலது பக்கத்தில் சாய்கிறது. இன்னம் உயரமாய்க் கட்டுகிறத்துக்கு முன்னே செவ்வை பண்ணு. செங்கல்லுகளின் நாலு அஞ்சு அடுக்குகள் மாத்திரம் தப்பாயிருக்கிறது.	Exactly. It leans to the right; correct before it is built any higher. Only four or five courses of bricks are wrong.
மறு பங்களாவுக்கு வா, உட் சுவர்களும் வாசற்படிகளும் பார்க்கவேண்டும்.	Come on to the next bungalow, I wish to look at the inner walls and doorways.
இங்கே, உன்னோடு பிளான்கொண்டுவா.	And here, bring the plan with you.
இந்த வளைவுகள் எல்லாம் ஒரே நடுவின்பேரில் கட்டியிருந்ததா?	Were all these arches built upon the same centres?
இதுபோல் இருக்கிற வளைவுக்கு இன்னம் கொஞ்சம் செங்கல்லுகள் நீ அறுக்கவேண்டும்.	You must cut the bricks a little more for such an arch as this.

போனவருஷம் கட்டியிருந்த இந்தப் பங்களா வாசற்படி வளைவுக்குச் சாந்து போட்டையா?	Did you use lime-mortar in these doorway arches in the bungalows that were built last year?
இல்லை, ஐயா; மணியாசமாத்திரம் பூசினேன்; அப்படி உத்திரவு இருந்தது.	No, Sir; only mud-mortar, so it was ordered.
கனத்த சுவரில் பூசினது போல மெல்லீசு சுவரில் அதுகள் எல்லாம் இங்கே நன்றாய் செய்திருக்கிறது உனக்குத் தெரியும்.	You know they are all to be made good here, in the thin walls as well as in the thick ones.
எனக்குத் தெரியும் ஐயா: அதுக அப்படிச் செய்திருக்கும்.	I understand, Sir; they shall be made so.
பார், இந்தக் கதவின் சட்டம் மாற்றிப் போட்டாய்.	See, you have put in this door-frame reversed.
மூட்டான்! நேற்று என் கையினாலே வைத்து அதைக் காட்டினேன்.	Stupid man! I set it up yesterday with my own hands and showed it.
இங்கே பார். ராமா. கதவின் சட்டம் இப்படி வைக்கவேண்டியதாயுனக்குக் காட்டவில்லையா? ஏன்என்றால் கதவுவெளிப்புறத்தில் திறக்காமல் உட்புறத்தில் திறக்கப் படும்.	Look here, Rama, did not I point out to you yesterday that the door-frame is to be set up in this manner because the door will open inwards, not outwards?
வட்டமாய்த் திருப்பி ஒரே தரமாய் திருத்தமாய் வை.	Turn it round and set it up correctly at once.
இந்தச் சுவர் இன்னம் கட்டவேண்டியிருந்தால், என்ன தொந்திரவு இருக்கும் பார்?	If this wall had been built any more, see what a deal of trouble there would have been?
உனக்குக்கொடுத்த உத்திரவை நீ காவிட்டால், உனக்கு அபராதம்போடப்படும்.	You must be fined if you don't attend to your orders.
இந்தச் சுவர் இப்பொழுது முழு உயரமுள்ளதா?	Is this wall now of the full height?
ஆம், ஐயா; அது முழுதும் இப்போது ஆச்சுது.	Yes, Sir, that is now complete.
அதிலே பரப்பு இருக்கிறதா?	Is the wall-plate on it?
ஐயா; இருக்கிறது, எல்லாம் தயாராயிருக்கிறது.	It is, Sir, all ready.
கூரைக்குப் போடுகிற பட்டைகள் வந்ததா? ஒர்க்ஷாப்பில் நேற்றுச் சாயந்திரம் அதுகள் எ.ல்லாம் மூடிந்திருக்கப் பார்த்தேன்.	Have the roofing timbers come? I saw them all complete yesterday evening at the workshop.

இன்றைக்கு அவர்கள் அதுகளைக் கொண்டு வருவார்கள்; இரண்டு மூன்று முட்டுக் கட்டைகள் வெளியிலேபோட்டிருக்கிறது.	They are bringing them to-day, and two or three trusses are now laid down there outside.
ஆனால் தச்சர்கள் நாளைநன்றை வரைக்கும் வரமாட்டார்கள், அவர்கள் வேறே வேலையிலிருக்கிறார்கள்.	But the carpenters cannot come till the day after to-morrow, they are engaged in some other work.
சரிதான் அவர்கள் இப்போது வேண்டுவதே இல்லை, ஏனென்றால் இந்தச் சுவர் நாளைய சாயந்திரம் வரைக்கும் முடியாது.	Indeed, they will not be wanted till then, for this wall will not be ready till to-morrow evening.
தச்சர்கள் எல்லாரும் என்னவேலை செய்கிறார்கள், உனக்குத் தெரியுமா?	What work are all the carpenters doing, do you know?
பாலத்தின் மையம் எடுக்க அனேக ஆளுகள் இன்றைக்குப் போனார்கள்.	A number of men have gone to-day to take down the bridge centering.
மெய்யாய் அவர்கள் நாளைக்கும் அதிலிருப்பார்கள்?	True, and they will be at that to-morrow too?
இன்னொரு கட்டை வண்டி கூரைக்குப் போடுகிற பட்டைகள் கொண்டு வருகிறது, இந்தச் செங்கல்லுகள் எல்லாம் எடுத்துப்போடச்சொல்லு.	There comes another cart with roofing timbers, you must get these bricks taken out of the way.
சுண்ணாம்பு ஏந்திரத்தின் மற்றொரு பக்கத்திலே இருக்கிற இந்தச் சின்ன செங்கல்லுகள் என்ன?	What small bricks are these on the other side of the mortar mill?
அதுகள் தூண்களுக்காக இருக்கிற செங்கல்லுகள்.	Those are the bricks for the pillars.
எனக்கு வேண்டிய மூங்கில்கள் கிடைத்தது, நமக்கு மெத்த கோரைப் புல்லுகள் இருக்கிறது, ஆகையால் கூரை வேலை சீக்கிரமாய் நடக்கும்.	I have obtained as many bamboos as are required, and we have grass in abundance, so the roofing will go on rapidly.
பாலத்தின் மையம் எடுத்து இருக்கிறதா?	Has the bridge centering been let down?
இரண்டு வளைவுகளின் மையம் எடுத்து ஆச்சுது, இப்போ வளைவுஇல்லை; மூன்றாவது வளைவை இப்போ திரு காணியால் தளர்த்துகிறார்கள்.	The centering of two of the arches has been let down and is now free from the arch: of the third they are now loosening the screw.
இந்த இரண்டு வளைவுகள் எவ்வளவு இறக்கமாச்சுது?	How much have these two arches sunk?
மெத்த கொஞ்சம்; சுமார் மூன்றரை அங்குலங்கள், மெத்த இல்லை.	Very little; about three and a half inches, not more.

அது மெத்த நல்லது, சீக்கிரமாய் வேலை இப்போ நடத்தி மழைக்கு முன்னே பாலம் முழுதும் முடிக்க வேண்டும்.	That is very good, you must now carry on the work rapidly and have the whole bridge finished before the rains.
நாங்கள் இன்றைக்கு மத்தியானம் வேலை நடத்துவோம்.	We shall carry on the work this afternoon.
இல்லை, மையம் எடுத்த பின்பு ஒரு நாளைக்கு மாத்திரம் வளைவு இருக்கட்டும்.	No, let the arches alone for a day after striking the centres.
மையக்கட்டைகளைப் பத்திரமாய் கிடங்குக்குக் கொண்டுபோக வேண்டும். வேறு பாலத்துக்கு அது மறுபடியும் வேண்டியிருக்கும்.	Have the centres carefully removed to the store house. They will soon be required again for the other bridge.
இன்றைக்கும் நாளைக்கும் உன் ஆளுகளுக்கெல்லாம் படியில் மெத்த வேலை இருக்கிறது.	There is plenty of work for all your men to-day and to-morrow on the steps.
போன மாசம் முடிந்த ஏந்திரவீட்டுக்கு எத்தனை பூசல் சாந்து பூசினாய். எனக்குச்சொல்லு?	Tell me how many coats of plaster did you give to the mill-house that was finished last month ?
மூன்று பூசல். ஆனால் மூன்றாவது வர்ணமாத்திரம்.	Three coats. But the third was merely color.
அதுதான் கேட்க வேண்டியதாய் இருந்தது. மூன்றாவது பூசல் எப்படிச் செய்தாய் ?	That is what I wish to ask you about. How did you prepare that third coat ?
ஒரு பங்கு ஆற்று மணலும் ஏழு பங்கு சுண்ணாம்பும், மெத்த தண்ணீருமாயிருந்தது.	There was one part river-sand to seven of lime, and great deal of water.
நல்லது; ஏந்திர வீட்டின் நிறம் மெத்த நன்றாய் காணுகிறது.	Well, that coloring of the mill-house looks very well.
நீ சாந்து பூசுகிற அந்தப் பங்களாவுக்கு அப்படியே இப்போ பூசட்டும்.	Let the bungalow you are now plastering be done in the same manner.
அந்தச் சுண்ணாம்பு வெள்ளையாயும் சுத்தமாயும் இருக்கவேண்டும்.	The lime must be very white and pure.
உட்புறத்துச் சித்திர வேலைக்கு வெள்ளைச் சுண்ணாம்பு இருக்கிறதா ?	Have you got the white lime for the cornice inside ?
வெள்ளைச் சுண்ணாம்பு இல்லை, ஐயா.	There is no white lime, Sir.
கிடங்கில் நேற்று சாயந்திரம் விசாரித்தேன், குமஸ்தா மீந்த சுண்ணாம்பை அன்று காலமே கொடுத்துவிட்டதாய்ச் சொன்னான். அவர்கள் திரும்பி அனுப்பின ரசீது இதோ இருக்கிறது.	I enquired yesterday evening at the store and the clerk told me the last of it had been just given out that morning. Here is the receipt which they returned.

அதைக்குறித்து கடையில் கேட்டையா? அங்கே அதை வைத்துக் கொண்டிருந்த மனிதன் போன வருஷம் எனக்கு விற்றுப்போட்டான். உனக்கு நினைப்பில்லையா?	Have you made search in the bazaar for it? There is a man there who used to keep it, and who sold some to me last year. Don't you recollect?
ஆ, மெய்தான், நல்லது போய் விசாரி. மேஸ்திரி அவன் பேர் சொல்லுவான். திரும்பி வரும்போது என்னிடத்துக்கு வா.	Oh, true; well, go and enquire. Maistry will tell you the man's name. Come to me when you return.
நல்லது, வெள்ளையடிக்கச் சுண்ணாம்பு கிடைத்ததா?	Well, have you procured the lime for white washing?
இல்லை, ஐயா; அவன்பேர் கேட்டுக் கடைக்குப் போனேன், ஆனால் போய்விட்டான், அவன் கடை சாத்தி இருந்தது.	No, Sir; I ascertained the man's name and went to the bazaar, but he had gone out and his shop was closed.
அவன் எங்கே போனான்?	Where has he gone to?
அது எனக்குத் தெரியாது, ஆனால் அங்கே இருக்கிறவர்கள் அந்த இடத்தை இரண்டு மாசத்துக்கு முன்னே விட்டுப் போய்விட்டதாய் சொன்னார்கள்.	That I don't know, but the people there told me that he had left the place a couple of months since.
எங்கேயாவது கிடைக்குமா என்று நீ கேட்டையா?	Did you ask if it can be got any where else?
இல்லை;ஐயா; அது கேட்கஇல்லை.	No, Sir; I did not ask that.
போய் விசாரி கிடங்கில் இருக்கிற சுண்ணாம்பு உதவாது; அதின் நிறம் மெத்த கெட்டதாய் இருக்கிறது.	Go and enquire for the lime, as that which is in store will not do, its colour is very bad.
கடையில் கிடைக்க மாட்டாதென்று எனக்குத் தெரியும்.	I have ascertained, but it is not to be got in the bazaar.
அது அகத்தியமில்லை, வெள்ளைச் சுண்ணாம்பு புதுசப்ளை ஆகிற வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டும்.	Then there is no occasion for it. Wait until a fresh supply of the white lime is received.
மெத்த சுண்ணாம்பு சூளை போட்டுச் சேர்க்கப் பட்டிருந்த போதிலும், இப்போ கொண்டுவர ஒரு வண்டியும் கிடைக்கமாட்டாதென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.	They say that though there is plenty of lime ready burned and collected, they cannot get a single cart at present to bring it.
நாம் ஒரு மாசம் வரையில் காத்திருக்கக் கூடாது. நீ நாளைக்கு காலமே அனுப்ப வேண்டும். நமக்கு வேண்டியது கிடைக்கக் கூடும்.	We cannot wait for a month, you must send it to-morrow morning. We can probably get as much there as we want.

நான் வேறே பங்களாவைப் பார்க்கப் போகிறேன்.

I am going to look at the other bungalow.

இந்த மாசம் கடைசியில் இந்த பங்களா முடியுமென்று நினைக்கிறாயா?

Do you think this bungalow will be finished by the end of this month?

ஆம், ஐயா; சந்தேகம் இல்லாமல் முடியும். நாலு அஞ்சுநாள் வேலைமாத்திரம் மீதியாய் இருக்கிறது.

Yes, Sir; it will without doubt be finished. Only four or five days work now remains.

இன்னம் என்ன வேலை மீதியாய் இருக்கிறது எனக்கு வந்து காட்டு. விழல் கூரை முழுதும் முடிந்ததா?

Come and show me what work there is yet remaining. Is the thatched roof entirely finished?

இன்னம் இல்லை.

Not yet.

மேதவர் வேறே வேலைக்குப் போகாதிருந்தால் அதுவும் இன்றைக்கே முடியும்.

Had not the thatchers gone to the other work, that, too, would have been finished today.

தளவரிசை எல்லாம் ஈரமாயிருக்கின்றன. அதுகளைத் தொடக்கூடாது, தொட்டால் அதுகள் உடைந்துபோகும். இந்தக்காலத்திலே அதுகள் சீக்கிரமாய் காயாது.

The floors are all very damp. They must not be touched or they will be broken, and they will not dry quickly in this weather.

இந்த இரண்டு சின்ன அறைகளுக்கும் மஞ்சள் வர்ணம் எங்கே கிடைத்தது?

Where did you get this yellowish colour for the two small rooms?

ஐயா, இது அந்திக் கடையில் அகப்பட்டது.

Sir, this is got from the Evening Bazaar

இந்த வெளிக் கதவுகள்எல்லாம் தூக்கிவைக்க இல்லையே.

These outer doors are not all up.

இல்லை, ஐயா; இன்னம் ஜன்னலுக்குக் கண்ணாடியும், தாழ்வாரத்துக்குத் தளவரிசையும், இரண்டு கதவுகளுக்குத் தாப்பாள்களும், இருக்கின்றன.

No, Sir; there still remain the glass for the window, the flooring of the verandah, and bolts for two doors.

மேலெழுதிய வாக்கியங்களெல்லாம் மராமத்து இலாக்காவைச் சேர்ந்த வேலைகளைச் செய்விக்கும்போது கூலிகளோடே பேசுகிறவகையைக் காட்டுகிறபடியினாலே வித்தியார்த்தி அதுகளை மெத்த ஜாக்கிரதையோடும் கவனத்தோடும் படிக்க விரும்புகிறோம்.

The above sentences being such that the student be put in the way of talking with the men in the course of business on all matters connected with the D. P. W., he is required to study them with great care and attention.

SELECTED STORIES.

(முதலாம் கதை.)

எந்த உயிரையும் * கொல்லாத, ஒரு சன்னியாசி ஒரு
Any life who never killed an ascetic a

ஏரி(க்)கரை மேலே போனான்; போகும் போது ஒரு செம்படவன்
lake bank on went going while a fisherman

அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சன்னியாசி செம்படவனை(ப்)
that in lake fish caught. the ascetic fisherman

பார்த்து ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய் என்றான்.
having seen alas! you when bank will ascend said.

ஐயா, என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன் என்றான்.
Sir, my basket if filled the bank will ascend said.

(I.)

An ascetic who never killed any living creature went along the bank of a lake; as he was going, a fisherman was catching fish in the lake. The ascetic on seeing the fisherman exclaimed, "Alas! when will you ascend to heaven?" (literally when will you ascend the bank) "Sir!" said he, "when I have filled my basket I will ascend."

* உம், indicating the whole of a number or a series, universality, totality.

(இரண்டாம் கதை.)

இரண்டு மல்லக * ஜெட்டிகள் † ஒருவனுக்கு ஒருவன் மல்லயுத்
Two pugilists to a man a man boxing

தம் பண்ணினார்கள். அதில் ஒருவன் ஒருவனை(க்) *குப்புறத்தள்ளி,
made. In it a man another having knocked down,

(ப்) புரட்டி(ப்) புரட்டி உதைத்தான். உதை உண்ட
having rolled having rolled kicked. The kick who had received

வீரன் எழுந்து நின்று சனங்களை(ப்) பார்த்து;
hero having risen having stood the people having looked; at

ஆனால் என்ன என் மீசையிலே மண் பட இல்லை
But what my in mustaches dirt to touch not

என்று மீசையை முறுக்கினான்.
so mustaches twisted.

(II.)

Two pugilists were boxing with each other; one of them having knocked the other down on his face, kicked him till he rolled over and over. The hero who had been kicked stood up, looked at the people, and twisting his mustaches said, "Well! what of that? The dirt has not touched my mustaches."

* To throw one down upon the face.

† ஒருவனுக்கு ஒருவன், each other.

(மூன்றாம் கதை.)

ஒரு மனிதன் ஒரு மகாராசனை(ப்) பார்த்து நீர் எனக்கு
A man a rich man having seen you to me

ஆறு மாசம் நல்ல சாப்பாடு போட்டால் பிறகு ஒரு
six months good food if supply after one

பெரிய மலையை எடுப்பேன் என்றான். அவன் இவனுக்கு
great mountain will carry said. He to this man

அப்படியே நல்ல ஆகாரம் கொடுத்தான். பிறகு மலை
accordingly excellent food gave. Afterwards a mountain

அண்டை அழைத்து (ப்) போய் இதை எடு என்றான்.
near having called having gone this carry said.

அவன் நீங்கள் எல்லாரும் எடுத்து என் தலை மேலே
He you every one having lifted my head on

வைத்தால் எடுக்கிறேன் என்று சொன்னான்.
if keep, will carry so said.

(III.)

A man saw a rich gentleman and said to him, "If you will supply me with good food for six months, after that I will carry a great mountain." He accordingly gave him excellent food. Afterwards having called him and approached a mountain, he said, "Carry this mountain." "If you will all put it on my head, I will carry it," he replied.

(நாலாம் கதை.)

ஒரு செலவுகாரன் ஒரு * சிக்கெனக்காரனை (க்) கடன்
A spendthrift a miser aloan

கேட்டான். மறுபடி நீ எப்படி(க்) கடன் தீர்ப்பாய் என்றான்.
asked. again you how the debt will settle said.

என் சம்பளத்தில் மாசம் மாசம் சேர்த்து(க்)
my from pay month to month having saved

கொடுப்பேன் என்றான். இதற்கு முன்னே தானே சேர்த்துக்
will pay said. To this before only having
கொள்ளல் ஆகாதா? என்றான். தெரியாமல்
saved could not said without knowing
இருந்துவிட்டேன் என்றான் ஆனால், நான் தெரிவிக்கிறேன்,
was said. But I will teach,
ஏன் என்றால் கடன் கொடுக்க மாட்டேன் போ என்றான்
why if ask a loan to give cannot go said
பிறகு அவன் பணம் சேர்க்க(த்) தொடங்கினான்
afterwards he money to collect began.

(IV.)

A spendthrift asked a miser for a loan: " How will you repay the debt?" he enquired. "I will save monthly from my pay and will pay it," he said. " Could you not save it so before?" he asked. "I was ignorant, and neglected to do so," he said. " Then I will make you understand, for I will not lend you the money; go," he said. Afterwards the spendthrift began to save money.

* சிக்கென inf. (used adverbially) firmly, tenaciously.
* மாசமாசம் monthly.

(ஐந்தாம் கதை.)

ஒரு குரு தன் சிஷனுக்கு ஞானங்கள்
A priest his to disciple spiritual knowledge
உபதேசித்தான் உபதேசிக்கும் போது, சிஷன் தன்
taught teaching when, disciple its
வளையிலே * நுழைய(ப்) போகும் எலியை(ப்) பார்த்து அதன்
in hole to enter going a rat having seen. of it
மேலே நினைப்பாக* இருந்தான். குரு உபதேசித்து
upon thoughtfully was. Priest having instructed
ஆன உடனே, சிஷா, எல்லாம் நுழைந்ததா? என்றான்.
finishing immediately, O pupil, all has entered? said.
சிஷன் எல்லாம் நுழைந்தது வால் மாத்திரம் தான் நுழைய
the pupil all has entered tail but only to enter
இல்லை என்றான். ஆதலால் மூடர்களுக்கு(ச்) சொல்லுகிற
not said. Consequently to fools instructing
புத்தி இப்படி இருக்கும்.
advice such will be.

(V.)

A priest or gooroo (spiritual guide) was teaching his disciple. Whilst he was teaching, the pupil saw a rat entering into its hole, and was intent upon that. The gooroo immediately on finishing his lesson enquired of the pupil, "Has it all entered?" The pupil answered, "It has all gone in but the tail." Therefore, thus it will be if one imparts instruction to fools.

* Creep in through a narrow passage.

† It is joined to nouns as an adverb of quality, with the force of the English terminationly.

(ஆரும் கதை.)

ஒரு நாள் திருமலைராயன் ஒரு ஏரி(க்) கரை மேலே
one day Tirumal Rayah a lake bank on

சாரிபோனான். போகும் போது தனக்குஉள்ளே ஒன்றை
walked. going when himself within something

ஆலோசித்துக்கொண்டு* கூட வருகிறவர்களில்
having considered together among those who are coming

சில பேரை(ப்) பார்த்து இந்த ஏரி சலம் எப்படி
some persons having seen this lake water how

இருக்கிறது என்றான் அவர்கள் பால் போல இருக்கிறது
is said They milk like is

என்றும் முத்து(ப்) போல இருக்கிறது என்றும் தெளிவாய்
and pearl like is and clearly

இருக்கிறது என்றும் இப்படி(ப்) பல விதமாகச் சொன்னார்கள்.
is and thus various ways said.

பிறகு மந்திரி ஆகிய அப்பாசியை(ப்) பார்த்தான்.
after minister named Appagee looked.

அப்பாசி மகாராசாவே! ஜலம் கரையாலே இருக்கின்றது
Appagee O great king! the water by the bank is kept

என்றான். ராயன் சந்தோஷித்தான்.
said. The king was pleased.

(VI.)

One day Tirumalarayah was walking out on the bank of a lake; as he was going, he was considering something within himself. Looking at some of the persons who were accompanying him, he asked, "How is the water in this lake?" They replied, "It is like milk;" "It is like pearls;" "It is clear." Thus they delivered various opinions: afterwards the king looked at

his minister Appagee. Appagee said, "O great king! the water is kept by the bank." The king was pleased

* கொண்டு denotes continuation, certainty, &c., of the action, and that the fruit of it reverts to the agent.

(ஏழாம் கதை.)

ஒரு ஆசாரியன் சிஷன் வீட்டுக்கு வந்து சில

A priest of disciple to the house having come few

வார்த்தைகள் பேசிக்கொண்டு இருக்கும் போது சிஷா!

words having spoken being whilst O pupil!

உன் பிள்ளை நால்வர்களில் யோக்கியன் ஆர்? என்றான்.

your children among four well-behaved who? said

சுவாமி இதோ கூரை வீட்டின் மேலே ஏறிக்கொண்டு

Sir here thatched of the house on having mounted

கொள்ளி(க்) கட்டை சுற்றுகிறானே இவன் தான்

fire •brand whirling he only

இருக்கிறவர்களுக்குள்ளே பரம யோக்கியன் என்றான். குரு

among them of all best behaving boy said. The priest

மற்றை மூவர்கள் எப்படிப்பட்டவர்களோ * என்று மூக்கு

other three boys what short so nose

மேலே விரல் வைத்து(ப்) பெரு மூச்சு விட்டு

on finger having kept deep breath having left

அப்படியா என்று விசனப்பட்டான்.

is it indeed so was grieved.

(VII.)

A priest went to the house of a disciple, and whilst speaking a few words to him asked, "O my disciple! which of your four children is a well-behaved one?" "Sir!" he replied "this one who is mounted on the ridge of a thatched house and whirling a firebrand. He is the best behaved among them of all." The priest said, "What kind of persons must the other three be?" and having put his finger on his nose he heaved a deep sigh and said in sorrow, "Is it indeed so?"

* ஓ relating to objects of inferiority, baseness.

(எட்டாம் கதை.)

ஒரு பணக்காரன் தன் தகப்பனுக்கு ஓட்டிலே * கஞ்சி

A rich man his to father in potsherd conjee

வார்த்துக்கொண்டு வந்தான். அவன் பிள்ளை அதை(ப்)

having poured came his son it

பார்த்து அந்த ஓட்டை எடுத்து ஒளித்து(ப்)போட்டான்.
having seen that potsherd having taken concealed.

பிறகு அந்த(ப்) பணக்காரன் தன்னுடைய, தகப்பனை(ப்)
afterwards that rich man his father

பார்த்து ஓடு எங்கே என்று கேட்டு அடித்தான்,
having seen potsherd where so having asked thrashed

அந்த(ப்) பையன் அப்பா என் பாட்டனை
that boy O father my grand-father

அடியாதே நானே அந்த ஓட்டை எடுத்து
do not thrash I myself that potsherd having taken

ஒளித்து வைத்தேனேன் என்றால் நான் பெரியவன்
having concealed kept why or because I a grown up man

ஆன பிறகு உனக்கு வேறே ஓடு சம்பாதிக்க
became after to you another potsherd to get

மாட்டேன் என்றான் அதை(க்) கேட்டு(ப்) பணக்காரன்
cannot said it having heard the rich man

வெட்கப்பட்டு அன்று முதல் தன் தகப்பனை
being ashamed that time from his father

மெத்த சவுக்கியமாக வைத்து இருந்தான்.
very much in a hospitable manner having kept was.

(VIII.)

